### அகமதாபாத் விமான விபத்து:

# 241 பயணிகள் உயிரிழந்தனர்!

## விமானம் விழுந்த விடுதியில் 5 பேர் பலி!

அகமதாபாத், ஜூன் 14 –

**குஜராத்தின் அகமதாபாத் விமான நிலையத்தில் இருந்து 242 பேருடன் புறப்பட்ட சில நிமிடங்களில் ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளானது. அதில் 200-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். பலத்த தீ காயங்களுடன் பலர் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டனர். சமீப காலத்தில் நடந்த மிகப் பெரிய கோர விபத்து இது.**

அகமதாபாத் சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து வியாழக்கிழமை பிற்பகல் 1.38 மணிக்கு புறப்பட்டது. ஏர் இந்தியாவின் 171 என்ற போயிங் ரக விமானம். கேப்டன் சுமித் சபர்வால், துணை விமானி கிளைவ் குந்தர் ஆகியோர் விமானத்தை இயக்கினர். போயிங் 787-8 ட்ரீம்லைனர் எனும் இந்த விமானத்தில் 230 பயணிகள், 12 பணியாளர்கள் என 242 பேர் பயணித்தனர். இவர்களில் 169 பேர் இந்தியர்கள். 53 பேர் பிரிட்டன் நாட்டையும், 7 பேர் போர்ச்சுகீஸ் நாட்டையும், ஒருவர் கனடாவையும் சேர்ந்தவர்கள்.

விமானம் சரியாக 1.38 மணிக்கு விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டதாகவும், புறப்பட்ட 5 நிமிடங்களில் விபத்துக்குள்ளான தாகவும் ஏர் இந்தியா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விபத்துக்குள்ளான விமானத்தின் முன்பகுதி, அகமதாபாத் மேகனி நகர் பகுதியில் பிஜே மருத்துவக் கல்லூரியின் மருத்துவ மாணவர்கள் விடுதியின் கூரையின் மீது விழுந்தது.

பயங்கர வெடிச்சத்தத்துடன் விமானம் விழுந்ததை அடுத்து, தீ பற்றி எரிந்ததாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். பல மீட்டர் தொலைவுக்கு கரும்புகை வெளியேறியது. இந்த விமானம் அகமதாபாத்தில் இருந்து ஒன்பதரை மணி நேரம் பயணித்து லண்டன் செல்லக் கூடியது என்பதால், விமானத்தில் எரிபொருள் முழுமையாக நிரப்பப்பட்டி ருக்கும் கூறப்படுகிறது.



**துரிதமான மீட்புப் பணிகள்!**

விமானம் விபத்துக்குள்ளான தகவல் கிடைத்ததும், விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள், காவல் துறையினர், தீ அணைப்புத் துறையினர், மாநில பேரிடர் மீட்புப் படையினர் உள்ளிட்டோர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். தீ அணைப்பு வாகனங்கள் மூலம் தீயை அணைக்கும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

இதனைத் தொடர்ந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 241 பயணிகள் பலியாகியுள்ளனர். பலர் காயமடைந்த நிலையில் மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் அகமதாபாத் மாநகர காவல் ஆணையர் ஜி.எஸ். மாலிக் தெரிவித்துள்ளார். காயமடைந்தவர்களில் பெரும்பாலானோரும் விமானம் விழுந்த மருத்துவக் கல்லூரி விடுதியில் இருந்தவர்கள் எனத் தெரிகிறது.

**குஜராத் முன்னாள் முதல்வர் மரணம்!**

அகமதாபாத் விமான விபத்தில் குஜராத் மாநில முன்னாள் முதல்வர் விஜய் ரூபானியும் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. விபத்தில் சிக்கி அவர் உயிரிழந்த தகவலை மத்திய அமைச்சர் சி.ஆர் பாட்டீல் உறுதி செய்துள்ளார். தனது மகளை சந்திக்க அவர் நேற்று முன்தினம் மதியம் லண்டன் புறப்பட்டதாக தகவல். பிசினஸ் கிளாஸ் பிரிவில் அவர் விமானத்தில் பயணித்தார்.

**பயணி ஒருவர் உயிர் பிழைத்தார்!**

இந்த விமானத்தில் பயணித்த பயணி ஒருவர் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்துள்ளார். பயணி ஒருவர் உயிர் பிழைத்ததை அகமதாபாத் போலீஸ் கமிஷனர் ஜி.எஸ்.மாலிக் உறுதி செய்துள்ளார்.

விபத்து குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் முதலில் உறுதிப்படுத்திய ஏர் இந்தியா, பின்னர், விபத்தில் எந்தெந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் எத்தனை எத்தனை பேர் இருந்தார்கள்என்பது பற்றி விவரத்தையும், உறவினர்கள் தொடர்புகொள்ள வேண்டிய உள்நாட்டு ஹட்லைன் எண் 1800 5691 444-யும், வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்வதற்கு +91 8062779200 என்ற மொபைல் எண்ணையும் வெளியிட்டது.

**ரூ. 1 கோடி நிவாரண நிதி!**

இந்த விபத்தில் உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பத்துக்கும் டாடா குழுமம் ரூ.1 கோடி வழங்கும். காயமடைந்தவர்களின் மருத்துவச் செலவுகளையும் நாங்கள் ஏற்கிறோம். அவர்களுக்கான சிகிச்சையை உறுதி செய்வோம். விபத்தில் சேதமடைந்த பி.ஜே மருத்துவக் கல்லூரி விடுதி கட்டிடத்தை புனரமைப்பதில் எங்களது பங்கு இருக்கும்" என்று டாடா குழுமம் தெரிவித்துள்ளது.

இச் சம்பவத்துக்கு குடியரசுத் தலைவர், பிரதமர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி மற்றும் பல்வேறு நாடுகளிலிருந்து அதிபர்கள், பிரதமர்கள் உள்ளிட்டோர் இரங்கலை தெரிவித்துள்ளனர்.

### 242 பயணிகளுடன் சென்ற

# ஏர் இந்தியா விமானம் கோர விபத்து!

## மிகவும் அதிர்ச்சியடைந்ததாக முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, ஜூன் 14 –

**அகமதாபாத்தில் ஏர் இந்தியா விமானம் கோர விபத்துக்குள்ளானது குறித்து அறிந்து மிகவும் அதிர்ச்சி அடைந்ததாக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.**

அகமதாபாத் விமான விபத்து குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

242 பயணிகளுடன் ஏர் இந்தியா AI171 விமானம் அகமதாபாத்தில் கோரமாக விபத்துக்குள்ளானது அறிந்து மிகவும் அதிர்ச்சியடைந்தேன்.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் குறித்து மிகவும் கவலை கொள்கிறேன். சாத்தியமுள்ள அனைத்து வழிகளிலும் மீட்பு, நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என நம்புகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.





மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் செம்மொழி நாள் சிறப்பு நிகழ்ச்சியாக திருவாரூர் மாவட்ட தி.மு.க. கழகம் சார்பில் தியாகராஜ சுவாமி திருக்கோயிலில் சிறப்பு நாட்டியஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் பங்கேற்றவர்களை மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. கௌரவித்தார். உடன் மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்களம் ஜி.பாலு,அவை தலைவர் க.தன்ராஜ், நகரக் கழக செயலாளர் வாரை எஸ். பிரகாஷ், ஒன்றிய செயலாளர் ஆர்.பாலச்சந்திரன் சேகர். கலியபெருமாள், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், செல்வீஸ் பங்குதாரர் செந்தில் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் நிகழ்வில் பங்கேற்றனர்.

### நாகை மாவட்டத்தில்

# 30 சதவீத வாக்காளர்களை கழக உறுப்பினர்களாக இணைத்திடுவோம்!

## மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!

நாகை, ஜூன் 14 –

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம் தலைமை தாங்கினார். தொகுதி பார்வையாளர்கள் நாகை தொகுதி ஆர்.அருள் செல்வம், கீழ்வேளூர் தொகுதி இரா.சங்கர், வேதாரண்யம் தொகுதி ஜெயபிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



கூட்டத்தின் நோக்கம் குறித்தும் கூட்டத்தில் நிறை வேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் பேசினார். கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், க.இராஜேந்திரன், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், துணைச் செயலாளர்கள் ஆரூர்.மணிவண்ணன், கற்பகம் நீலமேகம், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா.குமார், ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், ஆர்.டி.எஸ்.சரவணன், கே.பழனியப்பன், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், சிக்கல் என்.ஆனந்த், சோ.பா.மலர்வண்ணன் நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், சி.சுப்பரமணியன், மரியசார்லஸ் உள்பட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறை வேற்றப் பட்ட தீர்மானங்கள்

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் ஸ்டாலின் அவர்களின் தலைமையில் திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு சமூக, பொருளாதார அரசியல் தளங்களில் முதன்மை மாநிலமாக திகழ்கிறது. முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிற்கே வழிகாட்டும் பல முற்போக்குத் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தி வருவதுடன் திராவிட இயக்கத்தின் மாபெரும் தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், ஆகியோர் அறிவுறுத்திய கொள்கைகளை பின்பற்றி திராவிட மாடல் ஆட்சி செய்து வருகிறார்.

கடந்த ஜூன் 1ம் தேதி மதுரை மாநகரம் கூடல் நகரில் கலைஞர் திடலில் ஒரு வரலாற்று சிறப்புமிக்க திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழுவைக் கூட்டி வெற்றிகரமாக நடத்தி முடித்த கழகத்தலைவர் தளபதியார் அவர்களுக்கு நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் நன்றியையும், பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறது. திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்கள் அனைத்தும் சிறப்பாக செல்பட்டு வருவதால் ஒவ்வொரு வீட்டிலும், ஒருவராவது ஏதேனும் ஒரு திட்டத்தில் பயனாளியாக உள்ளனர். இத்தகைய நலத்திட்டங்களும் மாநிலத்தின் வளர்ச்சியும், தொடர்ந்திடவும், மாநில உரிமைக்கான போராட்டங்களை உறுதியுடன் முன்னெடுக் கவும், நமது மண், மொழி, மானம் காத்திடவும் தமிழ் நாட்டின் அனைத்து குடும்பங்கும் ஒரு குடையின் இணைத்து வருகிற 2026 சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய காலத்தின் கட்டாயமாக உள்ளது. தமிழ்நாட்டின் உரிமைகளை காத்திடும் பொருட்டு ஓரணியின் தமிழ்நாடு கழகத்தின் சார்பில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பூத் கமிட்டிகள் மூலம் ஒவ்வொரு வாக்குச்சாவடியில் உள்ள பாகத்திலும் குறைந்த பட்சம் 30சதவீத வாக்காளர்களை கழகத்தின் உறுப்பினர்களாக இணைத்திட இலக்கு நிர்ணயம் செய்திட வேண்டு மெனவும், தமிழ்நாட்டின் வாக்காளர்களை ஓரணியில் தமிழ்நாடு என்ற இணைப்பதற்கான செயல்களை நாம் மேற்கொள்ள வேண்டும் எனவும், ஜுன் 20ம் தேதி முதல் 40 நாட்கள் ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள கிளை, வார்டு கழகச் செயலாளர்கள் தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கிணை நிறைவு செய்திட வேண்டும் எனவும், கழகத்தின் புதிய உறுப்பினர்கள் சேர்க்கை பணியினை மாவட்டக் கழகச் செயலாளர்கள், தொகுதி தேர்தல் பார்வையாளர்கள் முழுமையாக கண்காணித்து வெற்றிகரமாக்கிட வேண்டும் எனவும், அதிகமான வாக்காளர்களை கழக உறுப்பினர்களாக இணைக்க உறுதி ஏற்று ஓரணியில் நின்று மீண்டும் 2026 ஆட்சி அமைப்போம் . உறுப்பினர் சேர்க்கை பணியை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் சிறப்பாக செய்திட வேண்டும் என்றும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.





உதகை நகர தி.மு.க. சார்பில் உதகை நகர கழக செயலாளர் எஸ். ஜார்ஜ் தலைமையில், உதகை நகரம் முழுவதும், தமிழ்நாட்டில் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி என அமித்ஷா கூறும் நிலையில் அதைப் பற்றி கருத்து கூறாமல் தவிர்க்கும் எடப்பாடி பழனிசாமி தமிழ்நாடு மக்களுக்கு துரோகம் செய்கிறார் என்பதனை குறித்து பொதுமக்கள் அறியும் வகையில் துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்டத் துணைச் செயலாளர் ஜே. ரவிக்குமார், நகர மன்ற தலைவர் வாணீஸ்வரி, நகரத் துணைச் செயலாளர்கள் கார்டன் கிருஷ்ணன், ரீட்டா மேரி, நகர அவை தலைவர் ஜெயகோபி, நகரப் பொருளாளர் அணில் குமார், மாவட்டப் பிரதிநிதிகள் வெங்கடேஷ், தம்பி இஸ்மாயில், கார்த்திக்,மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் மஞ்சு குமார், காந்தல் ரவி, வெங்கடேஷ், கவுன்சிலர்கள் செல்வராஜ், ரமேஷ், கீதா, நாகமணி, வனித்தா, பிரியா வினோதினி, மேரி ஃபுளோரினா, அனிதா லட்சுமி, ப்ளோரினா புஷ்பராஜ், மீனா, திவ்யா , கழகத் தோழர்கள் புஷ்பராஜ், ஹென்றி ஜேம்ஸ், காந்தல் சம்பத், சுரேஷ், நிக்கோலஸ், சீனிவாசன், மகேஷ், பாபு, விஷ்ணுகுமார், சத்யராஜ், வில்லியம், ரஞ்சித், மூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

